# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 3 | 4 Pages | 04.08.2023 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 3 | 4 பக்கங்கள் | 04.08.2023 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |



## பீஜிங்கில் 140 ஆண்டுகளில் இல்லாத அளவில் கனமழை: 20 பேர் பலி



பீஜிங், ஆக. 4

சீனாவின் பல மாகாணங்களில் டொக்சூரி புயல் தாக்கும் என அந் நாட்டின் வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்திருந்தது. அதன் படி அங்குள்ள புஜியான் மாகாண கடற்கரை அருகே புயல் கரையை கடந்தது. அப்போது பெய்த கன மழை காரணமாக அங்கு கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இந்தப் புயலால் 100க்கு மேற் பட்ட வீடுகள் சேதமடைந்தன. சுமார் 6,000 ஹெக்டேர் பயிர்கள் நீரில் மூழ்கி நாசமடைந்தது. இத னால் அங்கு ரூ.493 கோடி அள வுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக சீன அரசாங்கம் கணித்துள்ளது. முக் கிய ஆறுகளில் தண்ணீர் அபாய அளவை விட தாண்டி ஓடுகிறது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 8 லட்சத்து 80 ஆயிரம் பேர் பாதுகாப் பான இடங்களில் தங்க வைக்கப் பட்டனர். கனமழையால் அங்கு இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலை யில், கனமழை காரணமாக சீனா வில் இதுவரை 20க்கும் மேற்பட் டோர் பலியாகியுள்ளனர். மேலும் 27 பேர் மாயமாகி உள்ளதாகக் கூறப்படுகிறது. சீன தலைநகர் பீஜிங்கில் கடந்த 140 ஆண்டுகளில் இல்லாத அளவில் கனமழை பதி வானது என அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர். பீஜிங் மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் 744.8 மி.மீட்டர் மழை பதிவாகியுள்ள தாக அந்நாட்டு வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## அரசால் அனைவரையும் பாதுகாப்பது சாத்தியமில்லை: மனோகர் லால் கட்டார்



சண்டிகர், ஆக. 4

அரியானா மாநிலம் நூ மாவட்டத்தில் நடந்த விஸ்வ இந்து பரிஷத் ஊர் வலத்திற்கு ஒரு தரப்பினர் கடும் எதிர்ப்பு தெரிவித்த னர். ஊர்வலம் மீது சில மர்ம மனிதர்கள் கல்வீசிய தால் இரு தரப்பினருக் கும் இடையே மோதல் ஏற்பட்டது. அந்த மோதல் கலவரமாக வெடித்தது. வன்முறை சம்பவங்கள் கட்டுப்ப டுத்தப்பட்டிருந்த நிலையில் நேற்று சில இடங்களில் மீண்டும் வன்முறை தலைதூக்கியது. நூ மற் றும் குருகிராம் மாவட்டங்களில் 144 தடை உத்தரவு அமல்படுத்தப் பட்டது. குருகிராம் மாவட்டத் துக்கு கூடுதலாக போலீஸ் படை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், அரியானா மாநில முதல் மந்திரி மனோகர் லால் கட் டார் செய்தியாளர்களைச் சந்தித் தார். அப்போது அவர் கூறியதாவது: மாநிலத்தில் சட்ட விரோத நடவ டிக்கை எதுவும் நடைபெறாமல் இருக்க 20 துணை ராணுவ படையி னர் நிலை நிறுத்தப் பட்டுள்ளனர். 2 போலீசார் மற்றும் பொதுமக்களில் 4 பேர் என மொத்தம் 6 பேர் உயிரிழந்துள் ளனர்.

அரசால் அனைவரையும் பாது காப்பது சாத்தியமில்லை. எனவே போராட்டக்காரர்கள் அமைதி வழி யில் திரும்ப வேண்டும். வன்முறை தொடர்பாக இதுவரை 116 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் 90 பேரிடம் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. இதில் சம்பந்தப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் தப்ப முடியாது. உறு தியாக நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

## வெளிநாட்டு சிறைகளில் 8,330 இந்தியர்கள் மாநிலங்களவையில் மத்திய மந்திரி தகவல்

புதுடெல்லி, ஆக. 4

பாராளுமன்றத்தின் மாநிலங்கள வையில் நேற்று அளிக்கப்பட்ட ஒரு எழுத்துப்பூர்வ கேள்விக்கு மத் திய வெளியுறவுத்துறை இணை மந் திரி வி.முரளீதரன் பதிலளித்தார். அப்போது அவர், மொத்தம் 90 வெளிநாடுகளில் உள்ள சிறைகளில் 8,330 இந்திய கைதிகள் உள்ளனர். அதிகபட்சமாக 4,630 பேர் வளை குடா நாடுகளின் சிறைகளில் உள்ள னர். நேபாளத்தில் 1222, பாகிஸ்தா னில் 308, சீனா 178, வங்காளதேசத்தில் 60, இலங்கை யில் 20 இந்தியர்கள் சிறைகளில் உள்ளனர். பல நாடுகளில் அமலில் உள்ள வலுவான தனியுரிமை சட் டங்களின் காரணமாக, சிறைக்கை திகள் விருப்பப்பட்டால் அன்றி, அவர்களைப் பற்றிய தகவல்களை அந்நாட்டு அதிகாரிகள் அளிப்ப தில்லை என தெரிவித்தார்.

## மனைவியைப் பிரிந்தார் கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ



டொரன்டோ, ஆக. 4

கனடா பிரதமராக பதவி வகித்து வருபவர் ஜஸ்டின் ட்ரூடோ. இவ ரது மனைவி சோபி கிரி கோரி ட்ரூடோ. இவர்க ளுக்கு திருமணமாகி 18 ஆண்டுகள் ஆனது. இந் நிலையில், கனடா பிரத மர் ஜஸ்டின் ட்ரூடோ தனது மனைவி சோபி கிரிகோரியைப் பிரிவ தாக இன்ஸ்டாகிராமில் பதிவிட்டுள்ளனர். பல அர்த்த முள்ள மற்றும் கடினமான உரையா டல்கள் மூலம் இம்முடிவை எடுத் துள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். இவர்களுக்கு சேவியர் (15), எல்லா கிரேஸ் (14), ஹாட்ரியன் (9) என்ற 3 குழந்தைகள் உள்ளனர். அவர்கள் ஒரு நெருங்கிய குடும்பமாக இருக் கிறார்கள், சோபியும் பிரதம மந்திரியும் தங்கள் குழந்தைகளை பாது காப்பான, அன்பான மற்றும் கூட்டுச் சூழ லில் வளர்ப்பதில் கவனம் செலுத்துகி றார்கள் என பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது. ஏற்கனவே டிரூ டோவின் அப்பா பியர்ரி ட்ரூடோ வும் தனது மனைவி மார்கரெட்டை 1979ல் பிரிந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சென்னை மழைநீர் வடிகால் பணிகள்: முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் ஆய்வு



சென்னை, ஆக. 4

தமிழ்நாட்டில் இன்னும் 2 மாதங் களில் வடகிழக்கு பருவமழை தொடங்க உள்ளது. அக்டோபர் மாதம் பருவமழை தொடங்கும் என் பதால் அதற்கு முன்னேற்பாடாக மழைநீர் தேங்காமல் இருக்க பல பகுதிகளில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. இதில் சென்னை மாநக ராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இது வரை ரூ.2,325 கோடி மதிப்பீட்டில் 738.22 கி.மீ. மழைநீர் வடிகால் பணிகள் முடிக்கப்பட்டு உள்ளது. வடசென்னை பகுதியின் கொசஸ்த லையாறு வடி நிலப்பகுதியில் ஒருங் கிணைந்த மழைநீர் வடிகால் பணி கள் ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியின் கீழ் 769 கி.மீ. நீளத்திற்கு ரூ.3,220 கோடி மதிப்பில் பணிகள் மேற்கொள்ளப்பட்டதில் இதுவரை 483.83 கி.மீ. நீளத்திற்கு பணிகள் நிறைவடைந்துள்ளன. தென் சென் னையில் கோவளம் வடிநிலத்தில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் ரூ.1,714 கோடி மதிப்பீட்டில் நடைபெறுகி றது. இதில் 160.83 கி.மீ. தூர பணி களில் 21.82 கி.மீ. நீளத்திற்கு பணி கள் முடிவடைந்துள்ளது. மற்ற பணிகள் நடைபெற்று வருகிறது. இது தவிர மழைநீர் வடிகால் தூர்வா ரும் பணி மற்றும் பழுது பார்க்கும் பணிகள் ரூ.27.55 கோடி மதிப்பீட் டில் நடைபெற்று வருகிறது. இந்த பணிகள் அனைத்தும் வடகிழக்கு பருவமழைக்கு முன்னதாக முடிக் கப்பட வேண்டும் என்று முதல மைச்சர் உத்தரவிட்டிருந்தார். கடந்த ஆண்டு பருவமழையின் போது சில பகுதிகளில் தண்ணீர் தேங்கியதால் இந்த முறை தண்ணீர் தேங்காத அள வுக்கு பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் என்று அதிகாரிகளுக்கு அறிவுறுத்தி இருந்தார். இந்த நிலை யில் சென்னை மற்றும் புறநகர் பகு திகளில் நடைபெற்று வரும் மழை நீர்வடிகால் பணிகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். முதலில் பழவந்தாங்கல் வழியாக நங்கநல்லூர் எம்.ஜி.ஆர்.சாலைக்கு சென்று அங்கு ரூ.71 கோடியே 31 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள் ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகளை பார்வையிட்டார். அங்கு நடைபெற்று வரும் 2.29 கிலோ மீட் டர் பணிகளில் 1.78 கி.மீ.பணிகள் முடிவடைந்து இருந்தது. மீதமுள்ள பணிகள் இம்மாத இறுதிக்குள் முடிக்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த பணி முடியும் போது இந்துகாலனி, பி.வி.நகர் மற் றும் நேரு நெடுஞ்சாலை பகுதிகள் பயனடையும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். மேலும் கோவளம் பேசின் மழைநீர் வடிகால் பணிக ளின் விவரங்களையும் முதலமைச்சர் கேட்டறிந்தார். அவருக்கு சென்னை மாநகராட்சி ஆணையர் டாக்டர் ராதா கிருஷ்ணன் பணிகளின் விவ ரங்களை விளக்கி கூறினார். பின்னர் அங்கிருந்து புறப்பட்ட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழி யில் பழவந்தாங்கல் போலீஸ் நிலை யத்துக்கு திடீரென சென்றார். போலீஸ் நிலையத்துக்கு வந்த முத லமைச்சர் மு.க.ஸ்டாலினை அங்கி ருந்த இன்ஸ்பெக்டர் மற்றும் போலீ சார் வரவேற்றனர். போலீஸ் நிலையத்தின் உள்ளே சென்று ஒவ் வொரு அறையாக சென்ற அவர் வரு கைப் பதிவேட்டையும் பார்வை யிட்டார். பொதுமக்கள் அளிக்கும் புகார்களின் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு தேவையான உதவி களை செய்ய வேண்டும் என போலீ சாருக்கு அறிவுறுத்தினார். அதன் பிறகு அங்கிருந்து போரூர் சென் றார். போரூர் ஏரி உபரி நீர் வெளி யேற ரூ.100 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும் மதகு பணிகளை பார்வையிட்டார். நீர்வளத்துறையின் பராமரிப்பில் உள்ள போரூர் ஏரியின் நீர்பரப்பு 252 ஏக்கராகும். இந்த ஏரியின் முழு கொள்ளளவு 67 மில்லியன் கன அடி யாகும். இதன் வலது கரையோரம் 25 மீட்டர் நீளத்திற்கு உபரி நீர் வழிந்தோடி அமைந்துள்ளது. ஏரி யின் மொத்த கரையின் நீளம் 3,092 மீட்டராகும். இந்த ஏரியில் இருந்து வெளியேறும் உபரிநீர் போகும் பாதையில் குடியிருப்புகள் அதிக மாகி விட்டதால் பல பகுதிகள் வெள்ளத்தால் சூழ்ந்து விடுகிறது. இதன் காரணமாக அங்கு புதிய மதகு அமைக்கும் பணி ரூ.100 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகி றது. போரூர் ஏரி முதல் ராமாபுரம் ஓடை வரை புதிதாக மூடிய வடிவி லான கால்வாய் அமைக்கும் பணி கள் அங்கு நடைபெற்று வந்தது. அதையும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டார். அவருக்கு பொதுப்பணித்துறை அதி காரிகள் பணிகள் பற்றி விளக்கி கூறி னார்கள். அமைச்சர் தா.மோ.அன்ப ரசனும் போரூர் ஏரி மதகு அமைக்கும் பணிகள் குறித்து சில விவரங்களை தெரிவித்தார். இந்த பணிகள் அனைத்தையும் வடகிழக்கு பருவம ழைக்கு முன்னதாக முடித்துவிட வேண்டும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அதிகாரிகளை கேட் டுக்கொண்டார். அதன் பிறகு அசோக் நகர் சென்றார். அங்கு 4வது அவென்யூ பகுதியில் ரூ.7.60 கோடி மதிப்பீட்டில் நடைபெறும் மழைநீர் வடிகால் பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த பகு தியில் கடந்த 2 ஆண்டுகளாக பருவ மழையின் போது 2 அடி உயரத்திற்கு மழைநீர் தேங்கியது. இதனால் மேற்கு மாம்பலம் பகுதியும் பாதிக் கப்பட்டது. இதற்கு நிரந்தர தீர்வு காண ரூ.7 கோடி 60 லட்சம் மதிப் பில் மழைநீர் வடிகால் கட்டப்பட்டு வருகிறது. இந்த பணிகளையும் முத லமைச்சர் மு.க.ஸ்டாலின் பார்வை யிட்டார். அவருக்கு மாநகராட்சி ஆணையர் டாக்டர் ராதாகிருஷ்ணன் வடிகால் பணி எப்போது முடியும் என்பதை விளக்கி கூறினார். இந்த பணிகள் அனைத்தையும் இன்னும் 2 மாதத்திற்குள் முடிக்க வேண்டும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கேட்டுக்கொண்டார். அப்போது அமைச்சர்கள் பொன்முடி, தா. மோ.அன்பரசன், மேயர் பிரியா, துணை மேயர் மகேஷ்குமார் மற்றும் அதிகாரிகள் உடன் சென்றிருந்தனர்.

## திட்டக்குடி சட்டமன்ற தொகுதியில் பல்வேறு நலத்திட்ட உதவிகள்: அமைச்சர் கணேசன் வழங்கினார்



ஆட்சியர் அருண் தம்புராஜ் தலைமையில் நடைபெற்ற கூட்டுறவு கடன் வழங்கும் நிகழ்ச்சியில் 6,318 பயனாளிகளுக்கு 40 கோடியே 43

கடலூர், ஆக. 4

கடலூர் மாவட்டம் திட்டக்குடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட நரசிங்கமங்கலம் கிராமத்தில் இருந்து பெண்ணாடம் முதல் நரசிங் கமங்கலம் வரை மற்றும் நரசிங்க மங்கலம் முதல் விருத்தாச்சலம் வரை இரண்டு புதிய பேருந்து வழித் தடத்தினை துவக்கி வைத்தார்.

மேலும் பெ.கொல்லத்தங்குறிச்சி கிராமத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் பணி செய்யும் பணியாளர்களை சந்தித்து குறைகளை கேட்டறிந்தார்.

இதனைத் தொடர்ந்து இறையூர் கிராமத்தில் ரூபாய் 35 லட்சம் மதிப் பீட்டில் புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையம் கட்டிடம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டினார். மற்றும் திட்டக்குடியில் கடலூர் மாவட்ட லட்சத்து 400 ரூபாய் கடன் உதவிக் கான காசோலைகளை தமிழகத் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி வெ கணேசன் வழங்கினார்.

நிகழ்ச்சியில் கூட்டுறவு மண்டல இணைப்பதிவாளர் நந்தகுமார் காவல்துறை துணை கண்காணிப்பா ளர் காவியா தாசில்தார் ரவிச்சந்திரன் காவல் ஆய்வாளர் சீனி பாபு உதவி ஆய்வாளர் பாக்யராஜ் மற்றும் மங்க ளூர் ஒன்றிய பெருந்தலைவர் கே என் டி சுகுணா சங்கர் நகர் மன்ற தலைவர் வெண்ணிலா கோதண்டம் நகரச் செயலாளர் பரம குரு நகர மன்ற உறுப்பினர்கள் நகர இளைஞரணி துணை அமைப்பாளர் ஆக்கனூர் பாரதிராஜா மற்றும் கட்சி நிர்வாகிகள் பொதுமக்கள் பயனாளி கள் கலந்து கொண்டனர்.

## தீரன் சின்னமலை நினைவு நாளை முன்னிட்டு மலர் தூவி மரியாதை



திருப்பூர், ஆக. 4

திருப்பூரில்தீ ரன் சின்னமலை 218 நினைவு நாளை முன்னிட்டு திருப்பூரில்இ ந்திய ஜனநாயக கட்சி மற்றும் கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி சார்பில் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

திருப்பூர் மாவட்டம் அனுப்பர் பாளையம் புதிய பேருந்து நிலையம் மற்றும் நல்லூர் பல் வேறு இடங்களில்அருகில் தீரன் சின்னமலை 218 வது நினைவு முன்னிட்டு இந்திய ஜனநாயக கட்சி மாவட்ட தலைவர் பாரி கணேசன் மற்றும்கொங்குநாடு மக் கள் பேசிய கட்சி சார்பில் மாவட் டத் தலைவர் ரோபோ ரவிஅவர்களின் தலைமையில் தீரன் சின்னமலை உருவப்படத் திற்கு வணக்கம் கோஷங்கள் இட்டு உருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்

இந்நிகழ்ச்சியில் திருப்பூர் மாநக ராட்சி மேயர் தினேஷ்குமார் துணை மேயர் பாலசுப்ரமணியம் கலந்து கொண்டனர். மற்றும் நிர்வாகிகள் பொறுப்பா ளர்களும் தொண்டர்களும் கலந்து கொண்டனர்.

# தவறான நோக்கத்துடன் அணுகினார்: ஓ.பி.எஸ். மகன் மீது பாலியல் புகார் அளித்த பெண்

சென்னை, ஆக. 4

முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வத்தின் மகனும் எம்.பி.யுமான ஓ.பி.ரவீந்திரநாத் மீது பெண் அளித்த பாலியல் புகார் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. காயத்ரி தேவி என்ற பெண்,

பாராளுமன்ற உறுப்பினர் ஓ.பி. ரவீந்திரநாத் மீது தமிழக டிஜிபி அலுவலகத்தில் புகார் மனு அளித்துள்ளார்.





உடன்பிறவா சகோதரனாக நினைத்து பழகி வந்த ஓ.பி.ரவீந்திரநாத்,தன்னை தவறான நோக்கத்துடன் அணுகியதாக அவர் தெரிவித்தார். அதற்கு மறுப்பு கூறியதால், செல்போனில் ஆபாச வார்த்தைகளில் பேசி வருவதாகவும், அவரது நண்பர்கள் மூலம் தொடர்ந்து தனக்கு மிரட்டல் அளித்து வருவதாகவும் கூறினார்.

தனக்கு பாதுகாப்பு வழங்கப்படும் என டிஜிபி உறுதி அளித்திருப்பதாக கூறினார். புகார் மீது உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் முதல்வரை சந்திப்பேன் என்றார்.

# தண்ணீரின்றி கருகி வரும் நெற்பயிர்கள்

தஞ்சாவூர், ஆக. 4

தஞ்சாவூர் உள்பட காவிரி டெல்டா மாவட்டங்களில் குறுவை பாசனத்துக்காக மேட்டூர் அணை கடந்த ஜூன் மாதம் 12ம் தேதி திறக்கப்பட்டது. அதன் பின்னர் 16 ம் தேதி கல்லணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டது. இம்முறை டெல்டா மாவட்டங்களில் 5 லட்சம் ஏக்கரில் குறுவை சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தஞ்சை மாவட்டத்திலும் குறுவை சாகுபடி பணிகள் மும்முரமாக நடந்து வந்தன. ஆனால் மாவட்டத்தில் சில பகுதிகளில் வாய்க்கால்களில் போதிய தண்ணீர் வராததால் குறுவை பயிர்கள் காய்ந்து வரும் நிலை ஏற்பட்டுள்ளது.தஞ்சைஅருகேஉள்ள மணல்மேடு பகுதியில் மட்டும் 50 ஏக்கரில் குறுவை பயிர் சாகுபடி செய்யப்பட்டது. இந்த பகுதிக்கு தென் பெரம்பூரில் இருந்து ஜம்பு காவேரியில் தண்ணீர் வருவது வழக்கம். ஆனால் கடந்த சில நாட்களாக ஜம்பு காவேரியில் இருந்து தண்ணீர் வரவில்லை. இதனால் நடவு நட்டு 20 நாட்களான குறுவை பயிர்கள் காய்ந்து வருகின்றன. தண்ணீர் இல்லாததால் வயல்களில் பாலம் பாலமாக வெடிப்பு ஏற்பட்டுள்ளது. தண்ணீர் இல்லாமல் பயிர்கள் கருகி வருவதை பார்த்து வேதனை அடைந்த அப்பகுதி விவசாயி முனியாண்டி என்பவர் காய்ந்த பயிர்கள் மத்தியில் சோகத்துடன் படுத்து கிடக்கும் காட்சி மற்ற விவசாயிகளை கவலை அடைய செய்துள்ளது.



இது குறித்து விவசாயி முனியாண்டி கூறும் போது, நான் ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் செலவு செய்து நடவு செய்தேன். கடந்த 20 நாட்களாக ஜம்பு காவேரியில் தண்ணீர் வரவில்லை. இதுகுறித்து அதிகாரிகளிடம் கேட்டால் பராமரிப்பு பணி நடைபெறுகிறது என்று கூறுகிறார்கள் . கஷ்டப்பட்டு கடன் வாங்கி சாகுபடி செய்த நெற்பயிர்கள் தண்ணீர் இன்றி கருகுவதை பார்க்க வேதனையாக உள்ளது. வயல்களிலும் வெடிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் என்ன செய்வதென்று தெரியாமல் வயல்களில் படுத்து உள்ளேன். உடனடியாக தண்ணீர் திறந்து விட்டு எஞ்சிய பயிர்களை யாவது காப்பாற்றி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

# மாயமாய் போன மழை நீர் சேகரிப்பு

ராமநாதபுரம், ஆக. 4

தமிழ்நாட்டின் ஆண்டு சராசரி மழை அளவு 945 மில்லி மீட்டர். இந்த அளவு மழை தண்ணீர் மூலம் தமிழகத்தின் பாசன தேவையையும், குடிநீர் தேவையையும் முழுமையாக சமாளிக்க முடியும். ஆனால் அதை சாத்தியப்படுத்த முடியாத நிலைதான் உள்ளது. தமிழகத்தில் பெய்யும் மழையில் 35 சதவீதம் ஆவியாகி விடுகிறது. 14 சதவீதம் பூமிக்குள் சென்று விடுகிறது. 10 சதவீதம் மண்ணை ஈரப்பதத்துடன் வைக்க உதவுகிறது. மீதமுள்ள சுமார் 40 சதவீத மழை தண்ணீர் யாருக்கும் பயன்படாமல் வீணாக வெள்ளப்பெருக்காக மாறி கடலில் கலந்து விடுகிறது. இந்த 40 சதவீதம் மழை தண்ணீரில் எவ்வளவு தண்ணீரை பயன்படுத்த முடியுமோ? அவ்வளவு தண்ணீரை பயன்படுத்தி விடவேண்டும் என்ற திட்டத்துடன் கடந்த 2001ம் ஆண்டு அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதாவால் "மழை நீர் சேகரிப்புத் திட்டம்" கொண்டு வரப்பட்டது. ஜெயலலிதாவின் மகத்தான திட்டங்களில் இந்த திட்டம்தான் முதன்மையான திட்டம் என்று சர்வதேச அளவில் கூட பேசப்பட்டது. மற்ற மாநிலங்கள் இந்த திட்டத்தை ஆச்சரியத்தோடு பார்த்த நிலையில் தமிழகம் முழுவதும் வீடுகளிலும், அரசு அலுவலகங்களிலும், பொது கட்டிடங்களிலும் இந்த திட்டத்தை செயல்படுத்த தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஜெயலலிதாவின் தொடர் நடவடிக்கைகளால் மழை நீர் சேகரிப்பு திட்டம் மூலம் தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் நிலத்தடி நீர் மட்டம் கணிசமான அளவுக்கு உயர்ந்தது. குறிப்பாக சென்னையில் நிலத்தடி நீர் மட்டம் புவியியல் ஆய்வாளர்கள் ஆச்சரியப்படும் வகையில் அதிகரித்தது. அருமையான இந்த திட்டம் இன்று கானல்நீர் போல காட்சி அளிக்கும் பரிதாப நிலைக்கு தள்ளப்பட்டு இருக்கிறது. அரசு அதிகாரிகளும் அதை கண்டு கொள்ளவில்லை. பொதுமக்களும் அதைப் பற்றி கவலைப்படவும் இல்லை. சென்னை நகர மக்களுக்கு தட்டுப்பாடு இன்றி குடிநீர் கிடைப்பதுதான் மழை நீர் சேகரிப்பில் ஏற்பட்டுள்ள தொய்வுக்கு முக்கிய காரணமாக கூறப்படுகிறது.



பைப்பை திறந்தால் தண்ணீர் கொட்டுவதால் மழை நீரை சேமித்து வைக்க வேண்டும் என்கிற நினைப்பே கடந்த 10 ஆண்டுகளாக இல்லாமல் போய் விட்டது. சென்னையில் சுமார் 20 லட்சம் கட்டிடங்கள் உள்ளன. கடந்த 2021ம் ஆண்டு நடத்தப்பட்ட ஆய்வின்படி 74.23 சதவீதம் கட்டிடங்களில் மழை சேகரிப்பு இருந்தாலும் அவை முறைப்படி பராமரிக்கப்படவில்லை என்பது தெரிய வந்தது. 2021ம் ஆண்டுக்கு பிறகு அத்தகைய ஆய்வு கூட நடத்தப்படவில்லை. இதனால் மழை நீர் சேகரிப்பு என்பதே இல்லாத நிலைதான் தற்போது சென்னை நகர கட்டிடங்களில் காணப்படுகிறது. ஜெயலலிதா இந்த திட்டத்தை கொண்டு வந்த போது அடுத்தடுத்த ஆண்டுகளில் அதிகாரிகள் மழைநீர் சேகரிக்கப்படுகிறதா? என்பதை அக்கறையோடு உறுதிப்படுத்தி கொள்வார்கள். இப்போது அது இல்லை. இதனால் கட்டிடங்களில் மழை நீர் சேகரிப்பு குழாய் இருந்தாலும் அதில் வரும் தண்ணீர் நிலத்தடிக்குள் செல்கிறதா? என்பதை யாரும் உறுதிப்படுத்துவது இல்லை. சென்னையில் கணிசமான அளவுக்கு அடுக்குமாடி குடியிருப்புகள் உள்ளன. அதில் இருந்து வெளியேறும் மழை தண்ணீர் முன்பு முழுமையாக சேகரிப்பாக மாறியது.தற்போது அவையெல்லாம் கழிவுநீர் சாக்கடைக்குள் போய் விடுகிறது. அடுக்குமாடி குடியிருப்பு நலச்சங்கத்தினரும் அதை கண்டு கொள்வதில்லை. அடுக்குமாடி குடியிருப்புகளில் சமீபத்தில் நடத்தப்பட்ட ஆய்வில் 90 சதவீதம் மழை நீர் சேகரிப்பு குழாய்கள் பயன்பாட்டில் இல்லை என்று தெரிய வந்துள்ளது. அதாவது பெரும்பாலான கட்டிடங்களில் மழை நீர் சேகரிப்பு இல்லாமல் போய் விட்டது என்பதை இதை உறுதிப்படுத்துவதாக உள்ளது. பழுதடைந்த குழாய்களை சீரமைத்து புதிய குழாய்களை பொருத்த வேண்டுமானால் கூடுதல் செலவு ஆகும் என்பதால் பல அடுக்குமாடி குடியிருப்பு சங்கத்தினர், "அது எதற்கு வீண் செலவு" என்ற எண்ணத்தில்தான் இருக்கிறார்கள். இதே நிலைதான் அரசு கட்டிடங்களிலும் காணப்படுகிறது. அரசு கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்புக்கான குழாய்களை கூட காண முடியவில்லை. பிறகு எப்படி மழை நீரை சேகரிக்க முடியும்? இவற்றை குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளோ, மாநகராட்சி அதிகாரிகளோ, சென்னை பெருநகர வளர்ச்சி குழு அதிகாரிகளோ, யாருமே கண்டு கொள்வதும் இல்லை. கண்காணிப்பதும் இல்லை. ஒரு கட்டிடத்தில் மழை நீர் சேகரிப்பு வசதி செய்யப்படாவிட்டால் அல்லது மழைநீர் சேகரிப்பு விஷயத்தில் விதிகள் மீறப்பட்டு இருந்தால் அபராதம் விதிக்கும் அதிகாரம் மாநகராட்சிக்கு இருக்கிறது. ஆனால் அவை திறம்பட செயல்படவில்லை. மழைநீர் சேகரிப்புக்காக மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளுக்குஉள்ளது.ஆனால் அதுவும் திட்டமிட்டபடி நடப்பது இல்லை. சென்னையில் சாலைகளில் வழிந்தோடும் மழை தண்ணீரையும் சேமிக்க வேண்டும் என்பதற்காக ஆங்காங்கே மழைநீர்சேகரிப்பு துவாரங்கள் போடப்பட்டு உள்ளது. இது தவிர பூங்காக்களிலும் மழை நீர் சேகரிப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் சென்னையில் உள்ள 57 பூங்காக்களில் மழை நீர் சேகரிப்புக்காக ரூ.7.67 கோடியில் புதிய திட்டம் செயல்படுத்தப்பட்டு கொண்டு இருக்கிறது. ஆனால் மக்கள் ஒத்துழைப்பு இல்லாததால் மழை நீர் சேகரிப்பு முழுமையாக இல்லை. இதன் காரணமாக சென்னை முழுவதும் நிலத்தடி நீர் மட்டம் மீண்டும் கவலைப்படும் வகையில் மாறிக் கொண்டு இருக்கிறது. குறிப்பாக மாதவரம் மண்டலத்தில் அதிகளவு நிலத்தடி நீர் குறைந்து போய் விட்டது. ராயபுரம், அம்பத்தூர், தேனாம் பேட்டை மண்டலங்களிலும் நிலத்தடி நீர் மட்டம் மிக மிக குறைந்து விட்டது. ஜெயலலிதா ஆட்சியுடன் ஒப்பிடுகையில் 2 மீட்டர் அளவுக்கு நிலத்தடி நீர் மட்டம் குறைந்து விட்டதாக கணிக்கப்பட்டுள்ளது. தமிழகத்துக்கு அதிக மழை பொழிவை தரும் வடகிழக்கு பருவ மழை இன்னும் சில மாதங்களில் தொடங்க இருக்கிறது. அதற்கு முன்பு மழை நீர் சேகரிப்பு குழாய்களை போர்க்கால அடிப்படையில் சீர் அமைத்தால்தான் சென்னையில் மீண்டும் நிலத்தடி நீர் மட்டத்தை செழிப்பான ஒன்றாக மாற்ற முடியும். தற்போது சென்னை மாநகராட்சிக் குட்பட்ட பகுதிகளில் மழை நீர் வடிகால் பணிகளை மிக வேகமாக சீரமைத்துக் கொண்டு இருக்கிறார்கள். அடுத்த மாதத்துக்குள் (செப்டம்பர்) இந்த பணிகளை முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சென்னையில் எங்கு எல்லாம் மழை நீர் தேங்கும் என்று ஏற்கனவே ஆய்வு செய்து அடையாளம் கண்டுள்ளனர். அந்த பகுதிகளில் மழை நீர் தேங்காமல் இருப்பதற்காக 223.78 கிலோ மீட்டர் தொலைவுக்கு வடிகால் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்காக மட்டும் ரூ.761.87 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. மழை காலம் தொடங்குவதற்குள் இவை முடிக்கப்பட்டாலும் கட்டிடங்களில் உள்ள மழை நீர் சேகரிப்பு திட்டம் சீரமைக்கப்பட்டால் சென்னையில் மழை வெள்ள பாதிப்புகளை 10 சதவீதம் குறைக்க முடியும். எனவே மழை நீர் வடிகால் பணிகளில் காட்டப்படும் வேகம் போன்று மழைநீர் சேகரிப்பு திட்டத்திலும் அதிகாரிகள் ஆர்வம் காட்டினால் சென்னை நகர மக்களுக்கு இரட்டிப்பு பலன்கள் கிடைக்கும். ஆனால் அரசு நடவடிக்கை எடுக்கும் முன்பே பொதுமக்கள் தாமாக முன்வந்து மழை நீர் சேகரிப்பு குழாய்களை சீரமைத்தால் நிச்சயம் சென்னை குளிர்ந்த பூமியாக என்றென்றும் இருக்கும்.



சுதந்திரப் போராட்ட வீரர் தியாகி தீரன் சின்னமலை அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு, திருப்பூர் மாவட்டம், காங்கேயம் மேலப்பாளையம் சமுதாயக்கூடத்தில் மாவட்ட கலெக்டர் கிறிஸ்துராஜ் அன்னாரது திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்



தேனி மாவட்டம் வீரபாண்டி ஸ்ரீ கௌமாரியம்மன் கோவிலில் ஆடிப்பெருக்கு விழா வெகு விமர்சியாக நடைபெற்றது.



தீரன் சின்னமலை நினைவு நாளை முன்னிட்டு தமிழ்நாடு கொங்கு இளைஞர் பேரவை சார்பில் துரை தண்டபாணி தலைமையில் மாநகராட்சி முன்பு மரியாதை செய்யபட்டது,

# டெல்டா மாவட்ட காவிரி கரைகளில் ஆடிப்பெருக்கு விழா கோலாகலம்

தஞ்சாவூர், ஆக. 4

தமிழகத்தில் வளம் கொழிக்க வைக்கும் நதிகளில் ஒன்றான காவிரி தாய்க்கு நன்றி தெரிவிக்கும் விதமாகவும், மேலும் அனைவரது வாழ்விலும் காவிரி போல் மகிழ்ச்சியும் வளமும் பொங்கி வாழ வேண்டும் என்று காவிரிக்கு படையிலிட்டு வழிபடுவர். அதன்படி இன்று ஆடிப்பெருக்கு விழா தமிழகத்தில் குறிப்பாக தஞ்சை, திருவாரூர், மயிலாடுதுறை உள்பட காவிரி டெல்டா மாவட்டங்களில் விமர்சையாக கொண்டாடப்பட்டது. தஞ்சை மாவட்டத்தில் தஞ்சை பெரிய கோவில் புது ஆற்றுப் படித்துறை, வடவாற்று படித்துறை, வெண்ணாற்றுப் படித்துறை, திருவையாறு புஷ்ப மண்டப படித்துறை, சுவாமிமலை காவிரி படித்துறை, கும்பகோணம் பாலக்கரை காவிரி படித்துறை, மகாமகக்குளம் உள்பட பல்வேறு காவிரி ஆற்றங்கரைகளில் ஆடிப்பெருக்கு விழா கொண்டாடப்பட்டது. திருவையாறு காவிரி ஆற்றங்கரையில் உள்ள புஷ்ய மண்டப படித்துறைக்கு இன்று காலை முதலே பெண்கள் குடும்பம் குடும்பமாக வர தொடங்கினர். நேரம் செல்ல செல்ல கட்டுகடங்காத கூட்டம் காணப்பட்டது. படித்துறையில் ஏராளமான பெண்கள் வாழை இலையை விரித்து மஞ்சளால் பிள்ளையார் பிடித்து வைத்தனர். மேலும் தேங்காய், பழங்கள், வெற்றிலை, பாக்கு, மஞ்சள், பனை ஓலையால் செய்யப்பட்ட காதோலை, கருகமணி மாலை, வளையல், அரிசி, வெல்லம், மலர், பேரிக்காய், கொய்யா, மாதுளை, விளாம்பழம் ஆகியவற்றை வைத்து விளக்கேற்றினர். தொடர்ந்து மாவிளக்கு, அரிசி, வெல்லம் கலந்த காப்பு அரிசி ஆகியவற்றை வைத்து சாம்பிராணி, ஊதுபத்தி உள்ளிட்ட வாசனை பொருட்களை ஏற்றி வழிபாடு செய்ததுடன் மஞ்சள் பிள்ளையாருக்கும், காவிரி தாய்க்கும் தாம்பூலத்தட்டில் கற்பூரத்தை ஏற்றி வழிபட்டனர். இந்த வழிபாடு முடிந்தவுடன் புத்தாடை அணிந்து வந்திருந்த புதுமண தம்பதியினர் பெரியவர்களின் காலில் விழுந்து ஆசி பெற்றனர். தொடர்ந்து திருமணத்தின்போது தாங்கள் அணிந்து இருந்த மாலைகளை பைகளில் பத்திரமாக கொண்டு வந்து அவற்றை காவிரி ஆற்றில் புதுமண தம்பதியினர் விட்டு வழிப்பட்டனர். சுமங்கலி பெண்கள் ஒருவருக்கொருவர் மஞ்சள் கயிற்றை கழுத்தில் கட்டிக்கொண்டனர். அதே போல திருமணமாகாத இளம்பெண்களும் தங்களுக்கு திருமணம் நடக்க வேண்டியும், நல்ல மணமகன் கிடைக்க வேண்டியும் கழுத்தில் மஞ்சள் கயிறு கட்டிக் கொண்டனர். திருமணமாகாத ஆண்களும் தங்களுக்கு திருமணம் நடக்க வேண்டி மஞ்சள் கயிற்றை கைகளில் கட்டிக்கொண்டனர். இதேபோல் புதுப்பெண்களுக்கு தாலியை பிரித்து கட்டும் நிகழ்ச்சியும் காவிரி படித்துறையில் நடந்தது. திருமணத்தின்போது கட்டப்பட்டிருந்த தாலிக்கு பதிலாக புது தாலியை அணிந்து கொண்டனர். பின்னர் வாழை மட்டையில் தீபத்தை வைத்து காவிரி ஆற்றில் மிதக்கவிட்டனர். திருவாரூர் கமலாலய குளம், ஓடம்போக்கியாற்றின் கரைகளில் காலை முதலே பெண்கள் கூட்டம் அலைமோதியது. படிக்கட்டுகளில் மஞ்சளில் பிள்ளையார் உருவம் செய்து வைத்து காதோலை கருகமணியுடன் பேரிக்காய், வாழைப்பழம், வெல்லம் கலந்த அரிசி ஆகியவற்றை படையலிட்டு தீபம் ஏற்றி வழிபாடு நடத்தினர். மன்னார்குடி பாமணி நதிக்கரையில் புது பாலம், மேலப்பாலம், மன்னை நகர் ஆகிய பகுதிகளில் ஏராளமான பெண்கள் படையலிட்டு வழிபாடு செய்தனர். மயிலாடுதுறை துலாகட்டத்தில் ஆயிரக்கணக்கானோர் திரண்டனர். பாரம்பரிய முறையில் புதுப் பெண்கள் தாலி கயிறை பிரித்து கோர்த்தனர். புது மண தம்பதிகள் திருமண மாலைகளை ஆற்றில் விட்டு வழிப்பட்டனர். முக்கடல் சங்கமிக்கும் மயிலாடுதுறை மாவட்டம் பூம்புகாரில் காவிரி கடலோடு கலக்கும் சங்கம துறையில் பல்வேறு பகுதிகளில் இருந்து புதுமண தம்பதிகள் வந்து வழிபாடு நடத்தி, புதிய தாலி அணிந்தனர். கூட்ட நெரிசலை பயன்படுத்தி திருட்டு மற்றும் அசம்பாவித சம்பவங்கள் நடைபெறாமல்தடுக்கபடித்துறை பகுதிகளில் ஏராளமான போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். பல போலீசார் மப்டியில் நின்று கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர்.



# மக்களவை கூட்டத்தொடரில் பங்கேற்க அனுமதிக்க வேண்டும்: சுப்ரீம் கோர்ட்டில் ராகுல் காந்தி கோரிக்கை

புதுடெல்லி, ஆக. 4

கர்நாடக மாநிலத்தில் கடந்த 2019ம் ஆண்டு நடந்த தேர்தல் பிரசார கூட்டத்தில் பேசிய காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி, மோடி பெயர் குறித்து சர்ச்சைக்குரிய கருத்தை தெரிவித்தார். இதுதொடர்பாக ராகுல் காந்தி மீது குஜராத் பூர்னேஷ் மோடி குற்றவியல் அவதூறு வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கில் ராகுல் காந்திக்கு சூரத் பெருநகர மாஜிஸ்திரேட்டு கோர்ட்டு 2 ஆண்டு சிறைத்தண்டனை விதித்தது. அதனால் அவர் தனது மக்களவை எம்.பி. பதவியை இழந்தார். இதற்கிடையே, அவதூறு வழக்கில் 2 ஆண்டுகள் சிறை தண்டனை வழங்கி சூரத் கோர்ட்டு பிறப்பித்த உத்தரவை நிறுத்தி வைக்கக் கோரி ராகுல் காந்தி சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீடு செய்திருந்தார். சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகள் பி.ஆர்.கவாய், பி.கே. மிஷ்ரா ஆகியோர் தலைமையிலான அமர்வு இந்த மனுவை கடந்த மாதம் 21ம் தேதி விசாரித்தது. மனுவுக்கு பதில் அளிக்க குஜராத் அரசுக்கும், பா.ஜ.க. எம்.எல்.ஏ. பூர்னேஷ் மோடிக்கும் உத்தரவிட்டு, விசாரணையை ஆகஸ்டு 4ம் தேதிக்கு தள்ளி வைத்தது. இந்நிலையில், இந்த வழக்கு தொடர்பாக முன்னாள் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி சுப்ரீம் கோர்ட்டில் பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்துள்ளார். அதில் அவதூறு வழக்கில் தான் குற்றவாளி இல்லை. மன்னிப்பு கேட்க வேண்டும் என்றால், அதை முன்னதாகவே செய்திருப்பேன். எனவே தன் மீதான தண்டனையை நிறுத்திவைக்க வேண்டும். மக்களவையின் தற்போதைய அமர்வுகளிலும், இதன்பிறகு நடைபெறும் அமர்வுகளிலும் பங்கேற்க வழிவகை செய்யவேண்டும் என தெரிவித்துள்ளார்.



# இணைய வழி விளையாட்டுகள் மீது ஜிஎஸ்டி விதிப்பது தொடர்பான திருத்த வரைவு: தங்கம் தென்னரசு எதிர்ப்பு

சென்னை, ஆக. 4

இணைய வழி விளையாட்டுகள் மீது ஜிஎஸ்டி விதிப்பது தொடர்பான விதிகளின் திருத்த வரைவின் சில கூறுகளுக்கு அமைச்சர் தங்கம் தென்னரசு எதிர்ப்பு தெரிவித்தார். இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், "மத்திய நிதி மற்றும் பெருநிறுவன விவகாரங்கள் துறை அமைச்சர், சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத் தலைவர் நிர்மலா சீதாராமன் தலைமையில் இன்று 51வது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றக் கூட்டம் காணொலிக் காட்சி மூலம் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமைச் செயலகத்திலிருந்து இணைய வழியாக கலந்து கொண்டார். இணையவழி விளையாட்டுக்கள், சூதாட்ட விடுதிகள் மற்றும் குதிரைப் பந்தயம் ஆகியவற்றின் மீது ஜிஎஸ்டி வரி விதிப்பது தொடர்பாக சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் மற்றும் விதிகளின் திருத்த வரைவு, கூட்ட நடவடிக்கைப் பொருளாக எடுத்துக் கொள்ளப்பட்டது. தமிழ்நாட்டில், சமீபத்தில் இயற்றப்பட்ட தமிழ்நாடு இணையவழி சூதாட்ட தடை மற்றும் இணையவழி விளையாட்டுக்கள் ஒழுங்குபடுத்தும் சட்டத்தினை கருத்தில் கொண்டு, இக்கூட்டத்தில் முன்மொழியப்பட்ட சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் மற்றும் விதிகளின் திருத்த வரைவின் சில கூறுகளுக்கு எதிராக தங்கம் தென்னரசு வலிமையான கருத்துக்கள் எடுத்துரைக்கப்பட்டன. இணையவழி சூதாட்டம், பணம் அல்லது பிற ஆதாயங்கள் கிடைக்க வாய்ப்புள்ள இணையவழி விளையாட்டுக்கள் மற்றும் குறிப்பிட்ட வாய்ப்புள்ள இணையவழி விளையாட்டுக்கள் ஏற்கெனவே தடை செய்யப்பட்டு,

தமிழ்நாட்டில் தண்டனைக்குரிய குற்றங்களாக கருதப்படுவதால், தற்போது முன்மொழியப்பட்டுள்ள சட்டத் திருத்தங்களை அத்தகைய மாநில சட்டங்களுக்கு இணக்கமான முறையில் அமைய வேண்டும் என்று அமைச்சர் தங்கம் தென்னரசு வலியுறுத்தினார். சட்டம் மற்றும் விதிகளின் திருத்த வரைவில் குறிப்பிட்ட கூறுகளில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்தார். இணையவழி பண விளையாட்டுக்கான சட்ட வரையறையில், தற்போது நடைமுறையில் உள்ள எந்தவொரு சட்டம், அல்லது அதன் கீழ் தடை செய்யப்பட்ட, அல்லது வாய்ப்பின் அடிப்படையில் செயல்திறன் அல்லது விளைவுகள் இருக்கும் விளையாட்டுக்களை கொண்டுவரக்கூடாது என தெரிவித்தார்.

மேற்கூறிய மாற்றங்கள் முன்மொழியப்பட்டுள்ள சட்டத்திருத்த வரைவில் சேர்க்கப்பட வேண்டும் என வலியுறுத்தினார். அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் சட்டம் மற்றும் விதிகளின் திருத்த வரைவில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ள சரக்குகள் மற்றும் சேவைகள் வரிமன்றத்தால் உறுதியளிக்கப்பட்டது என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ஈஷா ஹோம் ஸ்கூலில் தடகளப் போட்டி: பிரதமரின் பொருளாதார ஆலோசனை குழு தலைவர் பங்கேற்பு

கோவை, ஆக. 4

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரிக்கு உட்பட்ட CISCE (Counsil for Indian School Certificate Examinations) பள்ளிகளுக்கு இடையிலான 2013ம் ஆண்டிற்கான மண்டல அளவிலான தடகளப்போட்டிகள் கோவையில் சத்குருவால் தொடங்கப்பட்ட ஈஷா ஹோம் ஸ்கூலில் சிறப்பாக நடைபெற்றன.

இதில் பிரதமரின் பொருளாதார ஆலோசனை குழுவின் தலைவர் பிபேக் தேப்ராய் சிறப்பு விருந்தினராக பங்கேற்று விளையாட்டு போட்டிக்கான கொடியை ஏற்றி வைத்தார்.

செயின்ட் ஜூட்ஸ் பப்ளிக் பள்ளியின் முதல்வர் சரோ தனராஜன் போட்டிகளை அதிகாரப்பூர்வமாக தொடங்கி வைத்தார். ஜூலை 31 மற்றும் ஆகஸ்ட் 1 ஆகிய 2 நாட்கள் நடைபெற்ற இப்போட்டிகளில் மாநிலம் முழுவதும் இருந்து 65 பள்ளிகள் மற்றும் 1,400 தடகள வீரர்கள் பங்கேற்றனர். வயதுகளின் அடிப்படையில் சப்ஜூனியர், ஜூனியர் மற்றும் சீனியர் என ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தலா 3 பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்பட்டது. சப்ஜூனியர் பெண்கள் பிரிவில் லே மார்கரேட் ராஜீவ் தனிநபர் சாம்பியன் பட்டம் வென்றார்.

ஆண்கள் பிரிவில் தன்வந்த் ராஜா, ஐயன் அமன்னா, பிரச்சனா ஆகியோர் முதலிடம் பிடித்தனர். ஜூனியர் பெண்கள் பிரிவில் நெல்சி செர்லின் மற்றும் சாதனா ரவி ஆகியோர் முதலிடம் பிடித்தனர். ஆண்கள் பிரிவில் ருத்ரேஷ் பாலாஜி தனிநபர் சாம்பியன் பட்டம் வென்றார்.

சீனியர் பெண்கள் பிரிவில் சஞ்சனா, சக்தி ராஜாராம் ஆகியோர் முதலிடம் பிடித்தனர். ஆண்கள் பிரிவில் சவன் எஸ் ரெஜினால்ட் தனிநபர் சாம்பியன் பட்டம் வென்றார். இந்த விளையாட்டு போட்டிகளின் தரத்தை உறுதி செய்யும் விதமாக, கோவை மாவட்ட தடகள சங்கத்தின் தொழில்நுட்ப குழு தலைவர் ஸ்ரீநிவாசன் மற்றும் துணைத் தலைவர் சிவகுமார் ஆகியோரின் மேற்பார்வையில் போட்டிகள் நடைபெற்றன. முன்னதாக, போட்டியின் தொடக்க விழாவில் ஈஷா ஹோம் ஸ்கூல் மாணவர்களின் களரிப்பயட்டு போட்டியும் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.



# உத்தரவை நிறைவேற்றாத கல்வித்துறை முன்னாள் செயலாளருக்கு 2 வார சிறைத்தண்டனை: ஐகோர்ட் மதுரை கிளை அதிரடி

மதுரை, ஆக. 4

திருநெல்வேலியைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் என்பவர் கல்வித்துறை தொடர்பான ஒரு வழக்கை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் தாக்கல் செய்திருந்தார். வழக்கை விசாரித்த நீதிமன்றம், உரிய நடவடிக்கை எடுக்கும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருந்தது. ஆனால் இந்த உத்தரவு முறையாக செயல்படுத்தப்படவில்லை. இதையடுத்து உத்தரவை நிறைவேற்றாத அதிகாரிகள் மீது நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும் என 2020ம் ஆண்டு ஞானப்பிரகாசம், நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம், அப்போதைய பள்ளிக் கல்வித்துறை செயலாளர் பிரதீப் யாதவ் மற்றும் அதிகாரிகள் விளக்கம் அளிக்க வேண்டும் என உத்தரவிட்டிருந்தது. இந்த வழக்கு நீதிபதி பட்டு தேவானந்த் முன்பு கடந்த மாதம் 19ம் தேதி விசாரணைக்கு வந்தபோது, அப்போதைய கல்வித்துறை செயலாளர் பிரதீப் யாதவ் மற்றும் அதிகாரிகள் நேரில் ஆஜராகி விளக்கம் அளித்தனர். அப்போது, நீதிமன்ற உத்தரவை ஏன் நிறைவேற்றவில்லை? என அவர்களிடம் கேள்வி எழுப்பிய நீதிபதி கடும் அதிருப்தி தெரிவித்தார். நீதிமன்ற உத்தரவை செயல்படுத்தாத ஒரு அதிகாரியையாவது சிறைக்கு அனுப்ப வேண்டும். அப்போது தான் சரியாக இருக்கும் என்று கூறினர். இவ்வழக்கில் இன்று நீதிபதி தீர்ப்பு வழங்கினார். அப்போது, நீதிமன்ற உத்தரவை செயல்படுத்தாத பள்ளிக் கல்வித்துறை முன்னாள் செயலாளர் பிரதீப் யாதவ் மற்றும் 2 கல்வித்துறை அதிகாரிகளுக்கு 2 வார சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கினார். தண்டனை விதிக்கப்பட்ட மூவரும் வரும் 9ம் தேதி உயர் நீதிமன்ற மதுரை கிளை பதிவாளர் முன் ஆஜராகும்படி உத்தரவு பிறப்பித்தார்.



# காஞ்சிபுரத்தில் அமைச்சர் தா.மோ.அன்பரசனிடம் 217 பேர் கோரிக்கை மனு



காஞ்சிபுரம், ஆக. 4

காஞ்சிபுரம் மாவட்டத்தில் பொதுமக்களின் அடிப்படை தேவைகள் தீர்க்க வாரம் ஒரு நாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் மாவட்ட கலெக்டர் மற்றும் அனைத்து துறை அலுவலர்களின் முன்னிலையில் மாவட்டத்தில் உள்ள பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் தருகின்ற கோரிக்கை மனுக்களை பெற்று அதன் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதன்படி நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் 217 மனுக்கள் பெறப்பட்டன. இதில் முக்கியமாக சாலை வசதிகள், இடுகாடுகளுக்கு சரியான அடிப்படை வசதிகள், வீட்டு மனைப் பட்டாக்கள் மேலும் கொடுக்கப்பட்டுள்ள பட்டாக்களை அடங்கலில் பதிய வேண்டும். குடிநீர் வசதிகள், வடிகால் கால்வாய்கள் தூர்வாரப்பட்டு சரி செய்ய வேண்டும், மின் கம்பங்கள் மாற்றப்பட வேண்டும், சில பகுதிகளில் மின்சாரம் குறைந்த மின் அழுத்த திறன் கொண்டு இருக்கிறது. அதனை சரி செய்ய வேண்டும் என்பன உள்பட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை பொதுமக்கள் அளித்தனர். இதில் மாற்றுத் திறனாளிகள் நலத்துறை சார்பில் மாற்றுத் திறனாளிகளுக்கு மின் மோட்டார் பொருத்தப்பட்ட தையல் எந்திரங்களும், ரூ.2.50 லட்சம் மதிப்பீட்டில் இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களும், கல்வித்துறை சார்பில் சிறந்த பள்ளிகளாக தேர்வு செய்யப்பட்ட 4 பள்ளிகளுக்கு ரூ.2.50 லட்சம் மதிப்பீட்டில் சிறப்பு பரிசளிப்பு தொகைக்கான காசோலையும், கூட்டுறவுத் துறை சார்பில் 5 மகளிர் குழுக்களுக்கு ரூ.70.06 லட்சம் மதிப்பீட்டில் கடன்களும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மகளிர் திட்டம் சார்பில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.1.07 கோடியில் வங்கி கடன் உள்பட பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் கலைச்செல்வி, ஸ்ரீபெரும்புதூர் எம்.எல்.ஏ. கு.செல்வப்பெருந்தகை, மாவட்ட வருவாய் அலுவலர் வெங்கடேஷ், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் செல்வகுமார், மாநகராட்சி மேயர் மகாலட்சுமி உள்பட பலர் பங்கேற்றனர்.

# வாக்குச்சாவடி நிலைய அலுவலர்களுக்கான பயிற்சி முகாம்

பொன்னேரி, ஆக. 4

பொன்னேரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தேர்தல் வாக்குச்சாவடி நிலைய அலுவலர்களுக்கான பயிற்சி முகாம் ஆர்.டி.ஒ அலுவலகத்தில் வட்டாட்சியர் செல்வகுமார் தலைமையில் நடைபெற்றது. இதில் வீடு வீடாக சென்று வாக்காளர் பட்டியல் சரி பார்த்தல் பணியில் முதலில் குடும்ப நபர்கள் சரி பார்த்தல், பின்னர் தனி நபர்கள் சரி பார்த்தல் படிவம் 6,7,8, பதிவு செய்யப்பட்டு பதிவேற்றம் செய்வது தொடர்பாக அலுவலர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டன. முகாமில் கலந்துகொண்ட வாக்குச்சாவடி நிலைய அலுவலர்களின் சந்தேகத்திற்கு தேர்தல் துணை வட்டாட்சியர் பதிலளித்தார். முகாமில் தேர்தல் துணை வட்டாட்சியர் கனகவள்ளி மற்றும் 50க்கும் மேற்பட்ட அரசு ஊழியர்கள் கலந்து கொண்டனர்.



# பள்ளிகளில் கற்றல் குறைபாடு மாணவ மாணவிகளுக்கு சிறப்பு பயிற்சி திட்டம்

தஞ்சாவூர், ஆக. 4

தஞ்சாவூர் கூட்டுறவு காலனியில் உள்ள மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் கற்றல் குறைபாடு உடைய மாணவ மாணவிகளுக்கு பிளிங்க் அறக்கட்டளை மற்றும் மைக்ரோசாப்ட் இணைந்து சிறப்பு பயிற்சி மற்றும் ஆங்கில மொழி மேம்பாட்டு திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது. இன்று இந்த திட்டம் தொடக்க விழா நடைபெற்றது. பள்ளி தலைமை ஆசிரியர் கார்த்திகேயன் அனைவரையும் வரவேற்றார். மாநகராட்சி துணை மேயர் அஞ்சுகம்பூபதி முன்னிலை வகித்தார். மேயர் சண்.ராமநாதன் இந்தத் திட்டத்தை தொடங்கி வைத்தார். அப்போது அவர் கூறும்போது, தமிழ்நாடு முதல்அமைச்சர் வழிகாட்டுதலின்படி இன்று தஞ்சை மாநகராட்சிகளில் நான்கு பள்ளிகளில் கற்றல் குறைபாடு மாணவர்களுக்கு சிறப்பு பயிற்சி, ஆங்கில மொழி மேம்பாட்டு திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலே தஞ்சாவூர் மாநகராட்சி தான் முதன் முதலில் இந்தத் திட்டத்தை தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும் தஞ்சை மாநகராட்சியில் 17 பள்ளிகளுக்கும் இந்த திட்டம் விரிவுபடுத்தப்படும். இந்தியாவிலேயே தமிழ்நாடு தான் நம்பர் ஒன் மாநிலம் என்றார். இந்தத் திட்ட மூலம் தினமும் ஒரு மணி நேரம் பள்ளியில் கற்றல் குறைபாடு மாணவர்களுக்கு சிறப்பு பயிற்சி வகுப்பு நடைபெறுகிறது. இணைய வழியில் வெளிநாட்டு பள்ளிகளுக்கு ஈடான வகையில் பாடங்கள் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. இன்று இந்த திட்டம் மூலம் மாணவர்களுக்கு பாடம் கற்றுக் கொடுக்கப்பட்டது. இந்த திட்டத்தின் முக்கிய நோக்கமே கற்றல் குறைபாடுகள் உள்ள குழந்தைகளை அடையாளம் கண்டு கற்றல் சவால்களை சமாளிக்க அவர்களுக்கு உதவி அளிப்பதாகும். மேலும் ஆசிரியர்களுக்கு சிறப்பு பயிற்சி விழிப்புணர்வை ஏற்படுத்துதல், முழுமையான ஸ்கிரீனிங் செயல் முறையை செயல்படுத்துதல் ஆகியவை முக்கிய செயல்பாடுகளில் அடங்கும். சிறப்பு பயிற்சி பெற்ற சிறப்பாசிரியர்கள் வாசிப்பு, எழுதுதல், புரிந்து கொள்ளும் திறன்களை மேம்படுத்த ஆன்லைன் வகுப்புகளை நடத்துவர். குழந்தைகளின் அத்தியாவசிய திறன்களை வளர்த்துக் கொள்ளவும், கல்வி வெற்றியை அடையவும் உதவும் உள்ளடக்கிய மற்றும் வளர்க்கும் சூழலை உருவாக்குவதே இந்த திட்டத்தின் நோக்கம் ஆகும். இந்த நிகழ்ச்சியில் பிளிங்க் அறக்கட்டளை நிறுவனர் அருண் பெர்னாண்டஸ் பேசும்போது, கற்றல் குறைபாடு உள்ள குழந்தைகள் மீது நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்த மைக்ரோசாப்டின் ஆதரவுக்கு நன்றி என்றார்.



# உலக தாய்ப்பால் வாரவிழா: டாக்டர்கள், கர்ப்பிணி பெண்கள் உறுதிமொழி ஏற்பு

மாமல்லபுரம், ஆக. 4

சதுரங்கபட்டினம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தின் மகப்பேறு பிரிவில், உலக "தாய்ப்பால் வார விழா" டாக்டர் கவிதா, கௌதமன் தலைமையில் நடைபெற்றது. 50க்கும் மேற்பட்ட கர்ப்பிணி பெண்கள், மருத்துவ பணியாளர்கள் தாய்ப்பாலின் மகத்துவம் குறித்து உறுதி மொழி ஏற்றனர். தொடர்ந்து வரும் 7ம் தேதி வரை மாமல்லபுரம், கல்பாக்கம், திருக்கழுக்குன்றம் சுற்று வட்டார கிராமப்புற பகுதிகளில் உள்ள பால்வாடி, சுகாதார மையம், மருத்துவமனை உள்ளிட்ட பகுதிகளில் கர்ப்பிணி பெண்களுக்காக தாய்ப்பால் வார விழா நிகழ்ச்சி நடத்தப்படுவதாக ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் இரா.பகவதி தெரிவித்தார்.



# அறங்காவலர் குழு தலைவர் பதவிக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம்

தருமபுரி, ஆக. 4

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம் பாலவாடியில் கிராம அறங்காவலர் குழு தலைவருக்கு அப்பகுதியைச் சேர்ந்த ஒருவரின் பெயர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் அறங்காவலர் குழு தலைவர் பதவிக்கு அதே பகுதியை சேர்ந்த மற்றொருவர் தனக்கு வேண்டும் என கேட்டுள்ளார்.

ஆனால் இவருக்கு மாவட்ட அறங்காவர் குழு தலைவர் பரிந்துரை செய்யவில்லை.

இதையறிந்த இவர் அறங்காவலர் குழு தலைவர் பதவி தரவில்லை என தெரிந்ததும் கானாப்பட்டி கிராமத்தில் உள்ள கோவில் முன்பு தனது ஆதரவாளர்களை திரட்டி தரையில் அமர்ந்து எதிர்ப்பு தெரிவித்தனர். அப்போது அப்பகுதியில் உள்ள ஆளுங்கட்சியை சேர்ந்தவர்கள் பரிந்துரையை மீறி, மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் பதவிக்கு வேறு ஒரு நபரை பரிந்துரை செய்ததாக கூறி அவருக்கு எதிர்ப்பு தெரிவித்தனர். மேலும் மாவட்ட அறங்காவலர் குழு தலைவருக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் தங்களது உறுப்பினர் அடையாள அட்டையை ஒப்படைக்க போவதாக கூறி போராட்டம் நடத்தினர்.

## 2018 பட இயக்குனருடன் இணையும் விக்ரம்.. எதிர்பார்ப்பில் ரசிகர்கள்



மலையாளத்தில் நிவின் பாலி, நஸ்ரியா நடித்து வரவேற்பை பெற்ற 'ஓம் சாந்தி ஓசானா', மற்றும் 'ஒரு முத்தஸி கதா', 'சாராஸ்' உள்ளிட்ட பல படங்களை இயக்கி வரவேற்பை பெற்றவர் இயக்குனர் ஜூட் ஆந்தனி ஜோசப். இவர் தற்போது '2018' என்ற பெயரில் புதிய படத்தை இயக்கி உள்ளார். இந்த படத்தில் டோவினோ தாமஸ், குஞ்சக்கோ போபன், ஆசிப் அலி, வினீத் சீனிவாசன், அபர்ணா பாலமுரளி, நரேன் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இந்த படம் அண்மையில் வெளியாகி ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது. அதுமட்டுமல்லாமல் வசூலையும் குவித்தது.

இதைத்தொடர்ந்து இயக்குனர் ஜூட் ஆந்தனி ஜோசப் இயக்கும் அடுத்த படத்தை லைகா நிறுவனம் தயாரிக்கவுள்ளதாக சமீபத்தில் அறிவிப்பு வெளியானது. இந்நிலையில், இந்த படத்தில் விக்ரம் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கவுள்ளதாகவும் இவருக்கு ஜோடியாக ராஷ்மிகா இணையவுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.



## படப்பிடிப்பை நிறைவு செய்த ஜிவி பிரகாஷ்ஐஸ்வர்யா ராஜேஷ் படக்குழு

இசையமைப்பாளர், நடிகர் என பன்முகத்தன்மை கொண்ட ஜிவி பிரகாஷ் குமாருடன் நடிகை ஐஸ்வர்யா ராஜேஷ் முதல் முறையாக இணைந்து நடித்துள்ள படம் 'டியர்'. இப்படத்தை 'செத்தும் ஆயிரம் பொன்' படத்தின் இயக்குனர் ஆனந்த் ரவிச்சந்திரன் இயக்குகிறார். மேலும் காளி வெங்கட், இளவரசு, ரோஹிணி, தலைவாசல் விஜய், கீதா கைலாசம் உள்ளிட்ட பலர் நடிக்கின்றனர். ஃபேமிலி எண்டெர்டெயின்மெண்ட் படமாக உருவாகி வரும் இப்படத்தின் ஃபர்ஸ்ட் லுக் மோஷன் போஸ்டரை சமீபத்தில் படக்குழு வெளியிட்டிருந்தது. இந்நிலையில் டியர் படத்தின் படப்பிடிப்பு நிறைவடைந்ததாக படக்குழு வீடியோ வெளியிட்டு அறிவித்துள்ளது. கொட்டும்மழையில்படக்குழுதங்களின்சந்தோஷத்தைவெளிப்படுத்துவது போன்று இடம்பெற்றிருக்கும் இந்த வீடியோ தற்போது வைரலாகி வருகிறது.

## ராட்டி வீடியோ பாடலை வெளியிட்ட பாட்னர் படக்குழு



அறிமுக இயக்குனர் மனோஜ் தாமோதரன் இயக்கத்தில் உருவாகியுள்ள திரைப்படம் 'பாட்னர்'. இதில் ஆதி, ஹன்சிகாமோத்வானி, பாலக்லால்வானி, யோகி பாபு, பாண்டியராஜன், ரோபோ சங்கர், ஜான் விஜய், ரவி மரியா, தங்கதுரை உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். ஷபீர் அகமது ஒளிப்பதிவு செய்திருக்கும் இந்த திரைப்படத்திற்கு சந்தோஷ் தயாநிதி இசையமைத்துள்ளார்.

நகைச்சுவையை மையப்படுத்தி தயாராகி இருக்கும் இந்த திரைப்படத்தை ராயல் ஃபார்ச்சூனா கிரியேஷன்ஸ் நிறுவனம் சார்பில் கோலி சூரிய பிரகாஷ் தயாரித்துள்ளார். இந்நிலையில் பாட்னர் படத்தில் இடம்பெற்றுள்ள ராட்டி என்ற வீடியோ பாடலை படக்குழு வெளியிட்டுள்ளது. இந்த பாடல் தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது. இந்த பாடல் 5 வருடத்திற்கு முன்பு 7அப் மெட்ராஸ் ஆல்பத்திற்காக சந்தோஷ் தயாநிதி இசையமைத்திருந்தது குறிப்பிடத்தக்கது.





## இந்தியாவின் முதல் தபால் மனிதன் கதை சொல்லும் 'ஹர்காரா' ரிலீஸ் தேதி அறிவிப்பு

'வி 1 மர்டர் கேஸ்' படம் மூலம் கதாநாயகனாக அறிமுகமான ராம் அருண் காஸ்ட்ரோ இயக்குனராக அறிமுகமாகியுள்ள திரைப்படம் 'ஹர்காரா'. தற்காலத்தில் டிஜிட்டல் வசதிகள் எதுவுமே இல்லாத ஒரு மலைக்கிராமத்திற்கு செல்லும் போஸ்ட்மேன் அங்கு படும் அவஸ்தையும், அங்கு வாழும் மக்களின் வாழ்க்கையும் பின்னணியாக கொண்டு இப்படத்தின் கதை அமைக்கப்பட்டுள்ளது. இயக்குனர் ராம் அருண் காஸ்ட்ரோ மற்றும் காளி வெங்கட் இப்படத்தில் கதாநாயகர்களாக நடித்துள்ளனர். கதாநாயகியாக கவுதமி நடித்துள்ளார். பிச்சைக்காரன் ராமமூர்த்தி, ஜெயப்பிரகாஷ் ராதாகிருஷ்ணன் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இப்படத்தின் படப்பிடிப்பு தேனி அருகில் மலை கிராமங்களில் நடைபெற்றுள்ளது. கலர்புல் பீட்டா மோமண்ட் (KALORFUL BETA MOVEMENT) தயாரிப்பில் உருவாகியுள்ள இப்படத்திற்கு ராம் சங்கர் இசையமைத்துள்ளார்.




## யுவன் சங்கர் ராஜாவுடன் இணைந்த அனிருத்.. வித்யாசமான முறையில் வீடியோ

பூவெல்லாம் கேட்டுப்பார், தீனா, நந்தா, 7 ஜி ரெயின்போ காலனி, மன்மதன், ராம், சென்னை 28, மங்காத்தா உள்ளிட்ட பல படங்களுக்கு இசையமைத்து ரசிகர்களின் மனதில் நீங்கா இடம் பிடித்தவர் யுவன் சங்கர் ராஜா. இவர் இசையில் சமீபத்தில் வெளியான கஸ்டடி மற்றும் பொம்மை படம் நல்ல வரவேற்பை பெற்றது. இவர் தளபதி 69 படத்திற்கு இசையமைக்கவுள்ளார். யுவன் சங்கர் ராஜா சில தினங்களுக்கு முன்பு சமூக வலைத்தளத்தில், எனது அடுத்த பெரிய பாடலுக்கு நான் எந்த இசை அமைப்பாளருடன் இணைய வேண்டும் என்று நினைக்கிறீர்கள்? பெயரை கீழே பதிவிடுங்கள், அதைச் செய்வோம்! என்று ரசிகர்களிடம் கேள்வி எழுப்பி இருந்தார்.

இதற்கு ரசிகர்கள் பலரும் அவர்களுக்கு விருப்பமான இசையமைப்பாளரின் பெயர்களை பதிவிட்டு வந்தனர். மேலும் பலரும் அனிருத் என்று தங்களின் விருப்பத்தை பதிவிட்டிருந்தனர். இந்நிலையில் யுவன் சங்கர் ராஜா, அவர்களின் விருப்பத்திற்கு இனங்க அனிருத்துடன் இணையவுள்ளதாகவித்யாசமானமுறையில்வீடியோவெளியிட்டுதெரிவித்துள்ளார். இந்தவீடியோ தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

## உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் புள்ளிகளை இழந்த ஆஸ்திரேலியா உஸ்மான் கவாஜா கண்டனம்



சமீபத்தில் நடந்த ஆஷஸ் தொடரில் மெதுவாக ஓவர்கள் வீசியதாக ஆஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்துக்கு அபராதத் தொகை மற்றும் உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் போட்டிக்கான அபராதப் புள்ளிகளை ஐசிசி விதித்துள்ளது. உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் புள்ளிப் பட்டியலில் 100 சதவீத புள்ளிகளுடன் பாகிஸ்தான் முதலிடம் வகிக்கிறது. இந்தியா 66.67 சதவீத புள்ளிகளுடன் 2வது இடத்தில் உள்ளது. ஆஸ்திரேலியா 30 சதவீத புள்ளியுடன் 3வது இடத்திலும், இங்கிலாந்து 15 சதவீத புள்ளியுடன் 5வது இடத்திலும் உள்ளன. இந்நிலையில், ஐ.சி.சி.யின் நடவடிக்கையால் அதிருப்தி அடைந்துள்ள ஆஸ்திரேலிய தொடக்க ஆட்டக்காரர் உஸ்மான் கவாஜா வெளியிட்டுள்ள டுவிட்டர் செய்தியில், மான்செஸ்டரில் நடந்த 4வது டெஸ்டில் இரு நாட்கள் பெய்த மழை காரணமாக 2வது இன்னிங்சில் எங்களுக்கு பந்துவீச கூட வாய்ப்பு கிடைக்கவில்லை. அப்படி இருந்தும் ஐ.சி.சி. பந்துவீச்சில் தாமதம் செய்ததாகக் கூறி டெஸ்ட் சாம்பியன்ஷிப்பில் இருந்து 10 புள்ளிகளை எங்களிடம் இருந்து பறித்துள்ளது. இது எப்படி நியாயமானது என்று தெரியவில்லை என பதிவிட்டுள்ளார்.

## தாமதமான பந்து வீச்சு உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் புள்ளிகளை இழந்த இங்கிலாந்து, ஆஸ்திரேலியா




சமீபத்தில் நடந்த ஆஷஸ் தொடரில் ஆஸ்திரேலியா, இங்கிலாந்து ஆகிய அணிகள் தலா 2 வெற்றிகளைப் பெற்றதால், அத்தொடர் சமனில் முடிந்தது. இந்நிலையில், ஆஷஸ் தொடரில் மெதுவாக ஓவர்கள் வீசியதாக ஆஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்துக்கு அபராதத் தொகை மற்றும் உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் போட்டிக்கான அபராதப் புள்ளிகளை ஐசிசி விதித்துள்ளது. இந்தத் தொடரில் இங்கிலாந்து அணி தாமதமாக பந்து வீசியதால் ஐசிசி நடவடிக்கை எடுத்துள்ளது. முதல் டெஸ்டில் 2 ஓவர்களையும், இரண்டாவது டெஸ்டில் 9 ஓவர்களையும், மூன்றாவது டெஸ்டில் 3 ஓவர்களையும், ஐந்தாவது டெஸ்டில் 5 ஓவர்களையும் இங்கிலாந்து குறைவாக வீசியது. இதற்காக ஒரு ஓவருக்கு ஒரு அபராதப் புள்ளி வீதம் அந்தஅணிக்கு19அபராதப்புள்ளிகள்விதிக்கப்பட்டுள்ளன. ஆஷஸ் தொடரில் 2 வெற்றி, ஒரு டிரா என மொத்தம் 28 புள்ளிகளை இங்கிலாந்து பெற்றது. 19 அபராதப் புள்ளிகள் விதிக்கப்பட்டதால் வெறும் 9 புள்ளிகளை மட்டுமே பெற்ற இங்கிலாந்து அணி புள்ளிகள் பட்டியலில் 5ம் இடத்துக்கு இறங்கியது. இதேபோல், 4வது டெஸ்டில் ஆஸ்திரேலியா அணியும் ஓவர்கள் வீச அதிக நேரம் எடுத்துக்கொண்டது.10ஓவர்கள்குறைவாகவீசியதால்அந்தஅணிக்கு10அபராதப்புள்ளிகள்விதிக்கப்பட்டுள்ளன. ஆஷஸ் தொடரில் ஆஸ்திரேலியா பெற்ற புள்ளிகளின் எண்ணிக்கை 18 ஆக குறைந்தது. உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் புள்ளிப்பட்டியலில் ஆஸ்திரேலியா 3வது இடத்தில் உள்ளது. மேலும், தாமதமாக வீசிய ஒவ்வொரு ஓவருக்கும் ஆட்ட ஊதியத்தில் 5 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. அதன்படி, ஆஸ்திரேலியாவுக்கு நான்காவது டெஸ்டுக்கான ஊதியத்தில் 50 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. இங்கிலாந்துக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் ஐந்தாவது டெஸ்டுகளுக்கு ஐசிசி முறையே 10, 45, 15 மற்றும் 25 சதவீதத் தொகை அபராதம் விதித்துள்ளது.



## தென் ஆப்பிரிக்காவுக்கு own goal போட்டு கொடுத்து வெற்றியை பறிகொடுத்த இத்தாலி

பெண்களுக்கான உலகக்கோப்பை கால்பந்து தொடர் ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தில் நடைபெற்று வருகிறது. 32 அணிகள் 8 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பிரிவிலும் நான்கு அணிகள் இடம்பிடித்துள்ளது. நாளையுடன் லீக் போட்டிகள் முடிவடைகிறது. இதுவரை நடந்து முடிந்த போட்டிகள் முடிவில் சுவிட்சர்லாந்து, ஸ்பெயின், நெதர்லாந்து, ஜப்பான் நார்வே, ஸ்வீடன், அமெரிக்கா, இங்கிலாந்து, நைஜிரியா, ஆஸ்திரேலியா, டென்மார்க் ஆகிய அணிகள் அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளது. இந்நிலையில் இன்று ஜி பிரிவில் நடைபெற்ற போட்டியில் தென் ஆப்பிரிக்கா இத்தாலி அணிகள் மோதின. 11வது நிமிடத்தில் முதல் கோலை இத்தாலி அணி போட்டது. தென் ஆப்பிரிக்கா அணி கோல் போட முடியாமல் தவித்த நிலையில் இத்தாலி அணி வீராங்கனையான பெனெடெட்டா ஓர்சி தங்களது அணி பக்கமே கோலை போட்டுகொடுத்தார். இதனால் முதல் பாதியில் இரு அணிகளும் 11 என்ற கணக்கில் சமநிலையில் இருந்தது. இதனையடுத்து நடந்த 2வது பாதியில் 67வது நிமிடத்தில் தென் ஆப்பிரிக்கா அணியும் 74வது நிமிடத்தில் இத்தாலி அணியும் கோல் போட்டனர். இதனால் இரு அணிகளும் 22 என்ற கணக்கில் இருந்தனர். இந்த பரபரப்பான ஆட்டத்தில் இறுதி நிமிடத்தில் தென் ஆப்பிரிக்கா அணி ஒரு கோலை போட்டதன் 32 என்ற கணக்கில் இத்தாலியை வீழ்த்தியது. ஓன் கோலால் இந்தாலி அணி தங்களது வெற்றி வாய்ப்பை இழந்தது பரிதாபத்துக்குரியதாக இருந்தது.



## ஆஸ்திரியா கிட்ஜ்புஹெல் ஏடிபி டென்னிஸ்: சீன வீரர் ஜாங் வெற்றி



ஆஸ்திரியாவில் கிட்ஜ்புகேல் ஏடிபி டென்னிஸ் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற ஒரு ஆட்டத்தில் சுவிட்சர்லாந்தின் ஹுயேஸ்லர் ஜெர்மனியின் ஆல்மையர் மோதினர். இதில் ஆல்மையர் 21 என வெற்றி பெற்றார். முதல் செட்டை 7(7)6(5) என ஹுயேஸ்லர் கைப்பற்றினார். ஆனால், 2வது செட்டை 26 எனவும், 3வது செட்டை 46 எனவும் இழந்தார்.

இதனால் ஆல்மையர் வெற்றி பெற்று காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறினார். மற்றொரு ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவின் ஓ'கானெல்ஐ செர்பிய வீரர் எல். ஜெரே 20 என வீழ்த்தினார். ஆஸ்திரியாவின் டி நோவக்கை பிரேசிலின் செய்போத் 20 என வீழ்த்தினார். செர்பியா வீரர் லாஜோவிச்சை சீனாவின் ஜாங் 20 என வீழ்த்தினார்.

## ஒருநாள் கிரிக்கெட்டில் 27 ஆண்டு கால சாதனையை முறியடித்த உனத்கட்

வெஸ்ட் இண்டீஸ் சுற்றுப்பயணம் செய்துள்ள இந்திய அணி இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 10 என கைப்பற்றியது. இதைத்தொடர்ந்து நடைபெற்ற மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 21 என்ற கணக்கில் வென்றுள்ளது. இந்த போட்டியில் வேகப்பந்து வீச்சாளர் ஜெயதேவ் உனத்கட், ருதுராஜ் கெய்க்வாட் அணியில் சேர்க்கப்பட்டனர். இதையடுத்து மூன்றாவது போட்டியில் 200 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற இந்திய அணி ஒரு நாள் தொடரை கைப்பற்றியது. இடது கை வேகப்பந்து வீச்சாளரான 31 வயதாகும் ஜெயதேவ் உனத்கட், இந்த போட்டியில் விளையாடிதன் மூலம் 9 ஆண்டு 252 ஆண்டுகளுக்கு பிறகு ஒருநாள் போட்டியில் இந்திய அணிக்கு திரும்பியதன் மூலம் அவர் 27 ஆண்டு கால சாதனையை முறியடித்துள்ளார்.

இதற்கு முன்னர் இந்திய முன்னாள் ஆல்ரவுண்டர் ராபின் சிங், 7 ஆண்டு 230 நாள்கள் கழித்து களமிறங்கியது தான் ஒருநாள் போட்டிகளில் அதிக இடைவெளி விட்டு விளையாடியதாக இருந்தது. அதாவது முதன் முதலில் 1989ம் ஆண்டு விளையாடி ராபின் சிங் பின்னர் 1996ல் மீண்டும் அணிக்கு திரும்பினார். இதைத்தொடர்ந்து ஜெயதேவ் உனத்கட் கடைசியாக 2013ம் ஆண்டில் இந்திய ஒருநாள் அணியில் விளையாடினார். இதன் பின்னர் தற்போது 2023ல் மீண்டும் விளையாடியுள்ளார். தனது கம்பேக் போட்டியில் 5 ஓவர்கள் பந்து வீசிய உனத்கட் 16 ரன்கள் மட்டும் விட்டுகொடுத்து 1 விக்கெட் எடுத்தார்.





Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.